காட்டுவழி வேல... ...ப்பாதையே நல்லது

Phone No 4502 | விலை அரை அணா | Regd. No. M. 5458 | இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (6—4—50) ❖ வெளியூர் (7—4—50) [இதழ் 216

ஏதும் அற்ற கிராமம் என்ன செய்ய இயலும்?

கவைக்குதவாத் திட்டங்களால் காசு கரியாக்கப்படுகிறது!

உபதேசம்புரியும் மந்திரிக்குக் காணிக்கை

"கிராமங்களில் வாழும் மக்கள் தங்களது அன்றாடத் தேவைகளை அவர்களே அடைய முயல வேண்டுமேயல்லாது அதற்காக அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்க்கக் கூடாது" என்னும் கருத்துப்பட, சென்னை மந்திரி தோழர் நே. சந்திரமௌலி அவர்கள் தென்னாலியில் நடைபெற்றக் கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் பேசும்போது, 'கிராம மக்களுக்கு அவர்களை அவர்களே ஆட்சி செய்து கொள்ளும்படியான அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாலும், காந்திய முறையில் வாழ்க்கையை நடத்துவதற்கான வசதிகள் அரசாங்கத்தால் செய்துகொடுக்கப்பட்டிருப்பதாலும், அவர்கள் வெளியாருடைய உதவியை எதிர்பார்ப்பது என்பது கூடாததாகும்" என்றும் கூறியுள்ளார்.

உலகோர்க்கு உணவு தரும் ஊற்றுக்களாக விளங்கும் கிராமங்கள், இந்தியத் துணைக் கண்டத்தில் புறக்கணிக்கப் படுவதைப்போல், உலகில் வேறு எந்த நாட்டிலும் புறக்கணிக்கப்படமாட்டா. ஆனால் கிராமங்களின் பெருமையைப் பற்றியும், அவை இருக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும் வெறும் சொற் கள... உ...

இந்தியத் தலைவர்கள் கிராமம் பற்றிய பேச்சில் பெருமிதம் காண்கிறார்கள்; ஆனால் கிராமங்களில் உள்ள நிலை அந்தப் பெருமிதப் பேச்சைக் கண்டு கேலிச் சிரிப்பு சிரிக்கிறது.

இந்தியத் துணைக்கண்டமும் சரி; அதில் ஒரு பகுதி நாடாக விளங்கும் திராவிடமும் சரி; கிராமங்களை ஏராளமாகக் கொண்டிருப்பனவாகும். அப்படிப்பட்ட கிராமங்களின் மீதுதான், நாடாளும் அரசாங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. உண்மை நிலை இவ்வாறு இருக்க 'கிராமங்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ள வேண்டுமே யல்லாது, அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்க்கக் கூடாது" என்று ஒரு மந்திரி ...திரி

...

...நாட்டில் நடமாடிக்கொண்டிருக்கிறார் என்பதைத்தானே அது விளக்கும்! அரசாங்கத்தினர்க்கு வேண்டிய பொருளுதவிகளைப் பெரும்பகுதியாக கிராமங்களிலிருந்து பெற்றுக்கொண்டு, அக்கிராமங்கள் சில இன்றியமையாத்தேவைகளைக் கேட்கும்போது, அவைகளை அக்கிராமங்களே நிறைவேற்...

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

செரட்சிகாமா தடைக்குக் காரணம் நிறவெறியே

கருப்பர்கள் என்று எழுவது திண்ணம்

மாஞ்செஸ்டர், ஏப் 5—

வெள்ளை மாதை மணந்த ஆப்பிரிக்க சுதேசித் தலைவர் செரட்சிகாமாவுக்குப் பிரிட்டிஷ் சர்க்கார் பிரஷ்ட உத்திரவு பிறப்பித்திருப்பது, கருப்பு நிறத்தவர்களிடையே ஆத்திரத்தையும் கோபத்தையும் மூட்டிவிட்டிருக்கிறது என்று பிரபல கிரிக்கெட் நிபுணரும் மேற்கு இந்திய பிரபலஸ்தருமானலியரிகான்ஸ்டன் இங்கு பேசுகையில் கூறினார்.

நிறத்திமிரே காரணம்

அவர் பேசுகையில், இந்த பிரஷ்ட் உத்திரவுக்கு நிறத்திமிர்தான் காரணம் என்று கூறினர்.

காபன்ஸில் சர்க்கார் கட்சியை ஆதரிக்கும் மெம்பர் இயான்மிக்கார்டோ என்பவர், ரீடிங் என்ற இடத்தில் பேசுகையில். இந்த பிரஷ்ட உத்திரவுக்குக் காரணம் நிறத்திமிர் அல்ல என்று சொல்வது தவறு என்றும் கூறினர்,

செரட்சிகாமா இந்த பிரஷ்ட உத்திரவு தன் பிரிட்டிஷ் மனைவிக்கும், இன்னும் பிறக்காத குழந்தைக்கும் கூட ஏற்படுத்தப்படுமோ என்று கவலைப்படுகிறார்.

டூனிஷியத் தலைவருக்கு பிரெஞ்சு தடை

கெயரோ, ஏப். 5—

டூனிஷிய டெஸ்டோர் கட்சித் தலைவர் ஹபீப் போர்குய்பா என்பவரை தென் டூனிஷியாவில் சுற்றுப்பிரயாணம் செய்யக்கூடாது என்று பிரெஞ்சு அதிகாரிகள் தடுத்ததைக் கண்டித்து மொராக்கோவைச் சேர்ந்த அமீர் அப்துல் கரீம் என்பவர் ஐ. நா. காரியதரிசி ஜெனரல் டிரிக்வெலிக்கு ஒரு கண்டனக் குறிப்பை அனுப்பியிருக்கிறார்.

டெஸ்டோர் கட்சியின் உபதலைவர் மைட்ரே மோஸ்ஜெஸ்லிம் இதேபோல் டிரிக்வெலிக்கு மற்றொரு குறிப்பை அனுப்பியிருக்கிறார்.

கெய்ரோவிலுள்ள டெஸ்டோர் கட்சியின் கிளை விடுத்துள்ள அறிக்கையில் இத்தடைக்குக் காரணம் அப்பிரதேசத்தை இரண்டாக பிரிக்க பிரெஞ்சு அதிகாரிகள் உத்தேசித்திருப்பதே என்று கூறப்படுகிறது.

சட்டசபை அங்கத்தினர் மீதிருந்த ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

காங்கிரஸ் கலகலத்துவிடுமென்ற பயமா?

திருவாங்கூரிலும் 'சென்னை குழப்பம்'

திருவனந்தபுரம், ஏப். 4—

இரண்டு காங்கிரஸ் அங்கத்தினர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று செய்திருந்த முடிவை திருவாங்கூர் கொச்சி காங்கிரஸ் சட்டசபைக் கட்சி, தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டது. அந்த இரு அங்கத்தினர்கள் தோழர்கள் மணத்து பத்மநாபன், ஆர் தங்கர் என்பவர்களாவார்கள்.

...எடுப்பது ...த்தைக் கால... யறையில்லாமல் தள்ளிவைத்துவிட்டதாக, முதல் மந்திரி தோழர் டி. கெ நாராயணப் பிள்ளை கூறினர்.

நடவடிக்கை ஏதாவது எடுத்துக் கொள்வதாக இருந்தால் உடனே எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், இவ்வாறு தள்ளிப் போடக் கூடாதென்றும் தோழர் சங்கர் பேசியதாகத் தெரிகிறது மற்றும் சங்கர்—பத்மனபன் கோஷ்டியினர் பலரும் அவ்வாறு பேசியதாகத் தெரிகிறது.

கட்சிக்கொரடா தோழர் அப்துல் அஜீஸ் மீது கூட ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்போவதாக தோழர் நாராயணப் பிள்ளை கூறியதாக அறிவிக்கப்படுகிறது.

காங்கிரஸுக்குள்ளேயே எங்கு கண்டவாறும் மன வேறுபாடு, ஒருவர்மீது ஒருவர் குற்றச்சாட்டு, பதவி வேட்டை. அதனல் பகைத்துக் கொள்வது போன்றவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே உள்ளன. ஊழல்கள் நிரூபிக்கப்பட்டால் உடைந்து ஒன்றும் செய்ய வேண்டாமென்று மேலிடம் உத்திரவுபிறப்பித்துள்ளது!

கொச்சி—திருவாங்கூர் காங்கிரஸின் போக்கு மிக விசித்திரமானது. நாஞ்சில் நாட்டுப் பிரதிநிதிகளை அவர்கள் நடத்தும்முறை, தமிழ் மக்களிடையே மிகவும் அருவருப்பை உண்டாக்கியுள்ளது.

திருவாங்கூர் தமிழரின் நியாயமான கோரிக்கைகளை உடனே நிறைவேற்ற வேண்டுமென்று முன்னாள் திருவாங்கூர் பிரதமர் பட்டம் தாணுப்பிள்ளைகூட சட்டசபையில் வன்மையாகக் கண்டித்தார்.

இந்த நிலையில் எடுத்ததெற்கெல்லாம் ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதும், பின்பு காங்கிரஸின் 'நல்ல பெயர்' கெட்டு விடுமென்று ரகசியத் தந்தி மேலிடத்திலிருந்து வந்தவுடன் அதை ரத்து செய்துவிடுவதும் காங்கிரஸின் நிலையை மக்களுக்கு விளக்காமல் போகவில்லை!

பறக்கும் தட்டுகள் மர்மம்

லண்டன், ஏப். 5—

பறக்கும் தட்டு மர்மங்களைக் குறித்து 'டெய்லி மெயில்' பத்திரிகைக்காக தகவல்களை சேகரிக்க நியமிக்கப்பட்ட ரிச்சாட்டிரிலோ என்பவர் பறக்கும் தட்டு ரஷ்யாவின் சிருஷ்டியேதான் என்றும், சில ...கள் ராக்கெட் சம்பந்தமான ...ச்சியுடன் சம்பந்தப்பட்டிருக்கின்றன என்றும், அதில் ஏதோ மர்மம் ...யிருக்கிறதென்றும் கூறினர்.

'யுனைடெட் ஸ்டேட்ஸ் நியூஸ்' என்ற அமெரிக்கப்பத்திரிகை புதிய டிசைன் உள்ள விமானங்களே பறக்கும் தட்டு என்று கூறியிருக்கிறது.

பெராக்குக்கு சீன கம்யூனிஸ்டு கான்சல்

ஸ்டேட் கவுன்சில் எதிர்ப்பு

சிங்கப்பூர், ஏப். 5—

பெராக் ஸ்டேட்டுக்கு சீன கம்யூனிஸ்டு கான்சலை ஏற்படுத்துவதை அனுமதிக்கக்கூடாது என்று மலேயா பெடரேஷன் சர்க்கார் மூலம் பிரிட்டிஷ் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளும் தன்ன ஸ்டேட் கௌன்சில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது.

பிரபல சீன பிரமுகரும், கம்யூனிஸ்டுகள் வீசிய வெடிகுண்டால் படுகாயமடைந்த வருமான லியாங் யூஹோ இத்தீர்மானத்தை பிரேரேபித்தார் ஒரு இந்திய மெம்பர் இதை ஆதரித்தார்.

கம்யூனிஸ்டு சீனக் கான்சல் இங்கு ஏற்பட அனுமதித்தால் கலகக்காரர்களை எதிர்த்து எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குலைந்துவிடும் என்று லியாங் வற்புறுத்தினர். (ராய்)

புடாபெஸ்டில் ரஷியா மாநாடு கூட்டுகிறது

—(0)—

டிட்டோ மீது நடவடிக்கை எடுப்பதே முக்கிய நோக்கம்?

லண்டன், ஏப். 5—

புடாபெஸ்டில் மிகவும் முக்கியமான ராணுவ மாநாட்டைக் கூட்ட ரஷ்யா யோசித்திருக்கிறதென்றும், இதில் ரஷ்யா சொற்படி ஆடும் நாடுகள் கலந்துகொள்ளும் என்றும் வியன்னாவிலிருந்து கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.

ஹங்கேரியில் சோவியத் ராணுவம் நுழைந்ததின் நினைவுதினம், மாநாடு நடைபெறும் சமயத்தில்தான் கொண்டாடப்படவிருக்கிறது.

இம் மாநாட்டில் காமின்பார்ம் நாடுகளின் பாதுகாப்பு மந்திரிகள் அல்லது அவர்களின் ஆலோசகர்களும் கலந்துகொள்ள விருக்கின்றனர்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு ஆயுததளவாடங்களை, கூட்டுப் பாதுகாப்பு திட்டம் முதலியவை குறித்து இம்மாநாட்டில் ஆலோசிக்கப்படுமாம்.

யூகோ மீது தீவிர நடவடிக்கையை எடுப்பது குறித்து இம்மாநாடு ஆலோசித்து முடிவு செய்யும் எனக் கூறப்படுகிறது. —குளோப்

அமெரிக்கா ஜவுளி மார்க்கெட்டை இடிக்கிறது

நியூயார்க், ஏப். 5—

ஜப்பான் ஜவுளி வியாபாரம் அபிவிருத்தியடைவது எதனல் என்பதைக் கண்டறிய அமெரிக்க, பிரிட்டிஷ் கோஷ்டியினர் ஜப்பானுக்கு மே மாதம் முதல் வாரம் செல்லவிருக்கின்றனர்.

பனாமாவில் நடைபெற்ற பருத்தி ஜவுளி உற்பத்தியாளர் மாநாட்டில் இம்முடிவு செய்யப்பட்டது.

அமெரிக்கா ஜவுளி ஏற்றுமதியை ஏராளமாகச்செய்து வந்திருக்கிறது. இனி பிரிட்டன், ஜப்பான், ஜெர்மனிக்கு அதேரசடியாகவே இதில் அமெரிக்கா இடம்பெறும்.

மாதாகோவிலில் மணி அடிக்க யுவதிகள்

லண்டன், ஏப். 5—

ஸஸெக்ஸில் 14-வது யுவதிகளுக்கு மாதாகோவிலில் மணி அடிக்க பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

முன்பெல்லாம் இத்தொழிலை ஆண்கள்மட்டுமே செய்துவந்தனர். இப்பொழுது, இத்தொழிலுக்கு ஆண்கள் வருவது குறைந்துவிட்டதால் பெண்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றனர்.

மாலை மணி

சென்னை 6—4—50 வியாழக்கிழமை

ஏப்ரல் 14

இந்து சமுதாயம், சலகலத்துப்போன அடித்தளத்தின் மீது நிற்கிறது.

உலகிலே அறிவு ஒளி பரவாத காலத்தில், ஆதிக்கக்காரர்களின் கொட்டம் தங்கு தடையற்று இருந்த சமயத்தில், நம்பப்பட்டு வந்த கொள்கைகள், சமுதாயச் சட்டங்களாகிவிட்டன.

எனவே, சமுதாயத்திலே ஜாதி பேதம் தலைவிரித்தாடிற்று; மதவெறி கோரக் கூக்குரலிட்டது, பெண்ணடிமை பேய்க்காற்றென வீசிற்று, எங்கும் கொடுமையும், மடைமையும் கூத்தாடி, உலகோர் கண்டு நகைத்திடும் நிலையை உண்டாக்கின.

பகுத்தறிவு, உலகின் பற்பல நாடுகளிலே பட்டமேறியும் கூட, இங்கு, பழமையின் ஆர்ப்பரிப்பு அடங்கவில்லை. புரையோடிப் போன புண்ணின் மீது தத்துவார்த்தம் எனும் தைலத்தைத் தடவிப் பார்த்தனர்—பலன் இல்லை—பலன் இருக்க முடியாது என்பதைப் பாமரரும் உணரலாயினர். அழுகிப்போன கொள்கைகள், நாறிப்போன கோட்பாடுகள், கலைக்குதவா திட்டங்கள், காலத்தோடு ஒட்டி வராத கருத்துகள்—இவைகளின் மீது கட்டப்பட்ட சமுதாயம், சரியாமல் என்ன செய்யும்!

எனவே, நாட்டின் தன்மானத்தைக் காப்பாற்ற, சமுதாயத்தின் சீரழிவைத் தடுக்க, நல்லறிவாளர்கள், இந்து சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும், பேதமற்றச் சமுதாயத்தைக் காண வேண்டும், எத்தர் சிலரும் ஏமாளிகள் பலரும் இருந்திடும் நிலையைநீக்கி, எல்லோரும் மனிதத் தன்மை பெற்றவர்களாக வாழ்க்கை நடத்துவதற்கான வகையிலே சமுதாயக் கோட்பாடுகளைத் திருத்த வேண்டும், மாதர் தம்மை இழிவு செய்யும் மடைமையை ஒழித்தாக வேண்டும் என்ற சீரிய நோக்கங்களைக் கொண்ட முறையில், இந்து சட்டத்தைத் திருத்தி அமைக்க முயன்றனர்.

விடுவரோ, வைதீகர்கள்! கெடுமே, தம் ஆதிக்கம் என்றகிலி கொண்டோராயினர்—கிளம்பினர் காட்டுக் கூச்சலிட்ட வண்ணம்! கெட்டிடும் நமது மதம்!—என்று அழலாயினர். மிரட்டலாயினர்—தரை மீது நின்றுமட்டுமல்ல, மரத்தின் உச்சி மீது ஏறிக்கொண்டும்!! அவர் தம் ஆர்ப்பரிப்புக்கு, அறிவுலகிலேயும் ஆதிக்கம் செலுத்தும் வாய்ப்பினை, பண பலத்தால் பெற்றுவிட்ட "புதுமைப் பஞ்சாங்கங்கள்", ஆதரவு காட்டின.

மெள்ள மெள்ளச் செல்ல வேண்டும் என்று கூறிடும் மேதைகள், தொட்டால் தர்மம் துவண்டுவிடும் என்று கூவிடும் பேதைகள், ஆகிய இருவரும் கூட்டு முன்னணி அமைத்துக்கொண்டனர்! நாட்டினரின் நல்வாழ்வுபற்றி அவர்களுக்கு என்ன! ஏட்டிலே உள்ளதிலே இம்மியும் மாற்றலாகாது எம்பெருமான் மீது ஆணை, என்பதிலேதான் அவர்களுக்கு மிகுந்த அக்கறை!

தண்டவாளத்தின்மீது கட்டை வண்டியைக் குறுக்காகப்போட்டு விட்டு, 'ரயில்' எதிர்ப்பு செய்யும் ஏமாளியை, பித்தர்விடுதிக்கே அனுப்புவர். கதிரோன் ஒளியினை வழங்கிடும் வேளையிலே, கையில் தீவட்டியுடன் கடைவீதி செல்வோனைக் கண்டால், எவரும் கைகொட்டிச் சிரிப்பர்! ஆம்! கைகொட்டிச் சிரிப்பர், காலத்தை உணராக் கபோதிகள் என்று உரைப்பர் ஆனால், இந்து சட்டத் திருத்தத்தை எதிர்த்திடும் பழமை விரும்பிகளை—வைதீகக் கும்பலை—பிற்போக்குவாதிகளை— ஆதரிக்கவும் கிளம்பின, "உலகச் சேதிகளை உன்னதமானமுறையில், உடனுக்குடன் வெளியிடும் உயர்தரமான தினசரிப் பத்திரிகைகள்"! இந்தக் கேவலமான நிலைமை இங்கு தவிர உலகில் வேறெங்கும் கா[...] முடியாது—நிச்சயம் முடி[...]

இந்துசட்டத் திருத்தத்தைத் தடுத்து நிறுத்த என்னென்ன வழிவகைகள் உண்டு என்ற ஆராய்ச்சியில் இறங்கின வக்கிரபுத்தி படைத்த வைதீகக் கும்பல்; அமைவேகத்திலே நகரலாயிற்று இந்து சட்ட திருத்த மசோதா. ஆர்ப்பரிப்போரின் போக்கைக் கண்டு ஆயாசமடைந்தனர், நல்லறிவாளர்கள்.

குடிஅரசின் தலைவர், இந்த மசோதாவைக் கண்டிக்கும் குணாளர்!

காங்கிரசின் தலைவர் பட்டாபி, இந்த மசோதாவைக்கண்டிக்கும் மேதை!!

இந்நிலையில் இருக்கிறது நாடு!!

இத்தகு சட்டமியற்றும் உரிமை, இன்றைய ஆட்சி மன்றத்துக்குக் கிடையாது, என்று கூறுகின்றனர், சட்டத்திற்குள் சந்துபொந்து தேடிடும் சழக்கர்கள்.

"ஓட்டுகள்' கிடைக்காமற் போகுமோ—என்று ஓலமிட்ட வண்ணம் கிளம்புகிறார், தேர்தல் தரகர்.

குடும்பத்திலே, ஆடவர்களுக்கு உள்ள 'இடம்' கெடுமே, என்று கூறுகிறார், பேத புத்தி படைத்த ஆதிக்கக்காரர். மந்தபுத்தியினர் மருள்கின்றனர்! சொந்தப் புத்தியற்றவர்களைக் கிளப்பிவிட்டு, "சோறு தின்னப் போர்—மரமேறி மார்தட்டும்போர்—படி மீது கிடந்து பாதையைத் தடுக்கும் போர்—மாரடித்து அழும் போர்—மரத்தடி மாநாடு கூட்டும் போர், என்று பல்வேறு "விநோதப் போராட்டங்களை"

நட[...] மதியா[...]

சீரழிந்து கிடக்கும் சமுதாயத்தை ஓரளவுக்கேனும் திருத்தலாம் என்றுபணியாற்ற முன்வருவோருக்கு, இவ்வளவு எதிர்ப்பு, இன்னல்!!

நாட்டு மக்களின் ஆதரவு பகுத்தறிவாளரின் பக்கபலம், தாய்மார்களின் பேராதரவு இந்தச் சட்டத் திருத்தத்துக்கு திரண்டு நிற்கிறது என்பதை உலகறியும்வண்ணம் செய்தாக வேண்டும். வைதீகர்களின் எதிர்ப்பு, கண்டு ஆயாசப்படவோ, அச்சப்படவோ கூடாது— அந்த எதிர்ப்பு, அறிவாற்றலை ஆதிக்கத்துக்குப் பயன்படுத்தும் சுயநலமிகளின் கூக்குரலேயன்றி வேறல்ல, என்பதை ஆளவந்தார்கள் அறிந்திடச் செய்யவேண்டும்.

ஏப்ரல் 14-ம் நாள், புதுடில்லியில் மாநாடொன்று கூட்டியிருக்கிறார் அறப்போர் அம்பேத்கார். இந்து சட்ட திருத்தம் பற்றி, எவரெவர் எவ்வெவ்வகைக் கருத்து கொண்டுள்ளனர் என்பதைக் கண்டறிய. சமுதாயத்தைத் திருத்தி அமைக்கும் முயற்சிக்கு எத்துணை ஆதரவு இருக்கிறது என்பதை அவர் அறிந்து அகமகிழ்ந்து, புத்துணர்ச்சியுடன் புதுவேகத்துடன், இந்த மசோதாவைச் சட்டமாக்கும் பணியில் ஈடுபடச் செய்தல் வேண்டும் வேட்டைக்காரரின் ஊதுகுழல் கேட்டு, விரண்டோடும் காட்டு விலங்குகள் போல, புத்துலகப் பணியாளரின் பரணி கேட்டு, பழமைப் [...]னரின் எதிர்ப்பு விரண்[...]

[...]மதை—திருமதிக[...] தீயிலே சள்ளி வந்த வழக்கத்தை—ஒழித்தபோதும், ஓலமிட்டனர், ஆர்ப்பரித்தனர் இந்த "ஓம் நமசிவாயங்கள்". ஆனால் அறிவுலகப் படை திரண்டது கண்டதும், ஓடி ஒளிந்தனர்! சாரதா சட்டத்தின்போதும் சலசலப்பு செய்தனர்-ஒவ்வொருமுற்போக்குத் திட்டம்புகுத்தப்பட்டபோதெல்லாம் எதிர்ப்புசெய்துதான்பார்த்தனர்—மக்கள், மனுமாந்தாதா காலத்திலேஇருந்ததுபோலவே ஏமாளிகளாக இருப்பர், என்ற எண்ணம் கொண்டு. வீறு கொண்டெழுந்தனர் வீரர்கள் விவேகிகள்—பதுங்கினர் இப்பழய பசலிகள்! இம்முறையும் அவர்தம் கூக்குரல்பயனற்றுத்தான் போகும்—போகும்படி, செய்யவேண்டிய பொறுப்பு தம்மைச் சார்ந்தது. நாட்டு மக்களின் கருத்தறியக் கூட்டுகிறார் மாநாடு- ஆனால்—டில்லியில்! அங்கு சென்று நமது கருத்தினை உரைத்திடப்போது மான வசதியும்காலமும்இல்லை, எனினும், திராவிட முன்னேற்றக் கழகம், இந்தச் சீர்திருத்த முயற்சிக்குப் பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட வழிவகை இருக்கத்தான் செய்கிறது. பெரிய பட்டணங்களில்மட்டுமின்றி பட்டி தொட்டிகளிலும் கிளைக் கழகங்கள் தழைத்துள்ளன. எப்ரல் 12-ந் தேதிக்குள், ஒவ்வொரு கிளைக்கழகமும், இந்து சட்ட திருத்த மசோதாவை ஆதரிக்கும் கூட்டம் நடத்தி, டாக்டர் அம்பேத்காருக்கு, தந்திமூலம் கூட்டத்திலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் தெரிவிக்க வேண்டும். ஆதரவுத் தந்திகளை அவர் பார்த்துப் பூரித்து, பெருமையுடன், எப்ரல் 14-ந் தேதி கூடிடும் மாநாட்டிலே, வைதீகர்கள் எதிர்ப்புக்கருத்தை எடுத்துரைத்தால், வீசுவார் அவர் தம் அகமும் முகமும் சுருங்கிடும் வண்ணம்! ஏதோ சில ஏடுகளைப் பிரித்து வைத்துக்கொண்டு, ஏலாதனவற்றைக் கூறுகிறீர், பாரீர், நாட்டின் நல்லறிவாளர்களின் மனப்பாங்கை, என்று அவர் கூறிட வேண்டும் அவர் முயற்சிக்கு நாட்டிலே திரண்டெழுந்துள்ள ஆதரவைக் கண்டு, மடிசஞ்சிகள் மருள வேண்டும். மன்னார்சாமிகள் கூட[...] செ[...]

[...]மசோதா, [...]ஜனநாயகமைய[...] உடனடியாக நிறைவேற்றப்படவேண்டிய சட்டமாகும். சமுதாயச் சீரழிவைத் தடுத்திட இந்த மசோதா ஒரு சிறு ஆனால் சீரிய முயற்சி. கலைக்குதவாக் காரணம் காட்டி இதனை வைதீகர்களும், பிற்போக்காளர்களும் எதிர்க்கின்றனர். அவர்கள் நாட்டு மக்களின் நல்வாழ்வில் அக்கரையற்றவர்கள். அவர்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தக் கூடாது. அறிவுலகம் மசோதாவை வரவேற்கிறது. ஆதரிக்கிறது. காலம் தாழ்த்தாமல். காரசாரத்தைக் குறைக்காமல், மசோதாவைச் சட்டமாக்குங்கள்-வருங்காலச் சந்ததிக்கு உரிமை வாழ்வு அளியுங்கள். **திராவிடமுன்னேற்றக் கழகம், தன் ஆதரவைத் தருகிறது—முயற்சிக்குப் பெருந்துணை புரியமுன்வருகிறது.**

இக்கருத்தமைந்த தீர்மானத்தைப் பொதுக்கூட்டத்திலே நிறைவேற்றி, டில்லி ஆளவந்தார்களுக்கு, குறிப்பாக, சட்ட மந்திரி டாக்டர் அம்பேத்காருக்கு தந்திமூலம் தெரியப்படுத்தக் கோருகிறோம். கழகத் தலைமைக் காரியாலயத்துக்கும் இதுபற்றி, தெரிவிக்கவும். ஏப்ரல் 14-ந் தேதி, டாக்டர் அம்பேத்கார் முன்பு, நமது கிளைக்கழகத் தந்திகள் குவிந்திருக்கவேண்டும்— நாட்டின் உண்மையான ஆதரவு, சீர்திருத்த முயற்சிக்குத்தான் இருக்கிறது என்பதை. ஆளவந்தார்கள் உணரச் செய்ய வேண்டும்.

—அண்ணாதுரை

தலைமைக்காரியாலயம்

கட்டட அமைப்புச் செலவுக்காக தங்கள் அன்பளிப்பை அனுப்பிவிட்டீர்களா?

இன்றே தருக!

பணம் அனுப்பவேண்டிய முகவரி:—

சி. என். அண்ணாதுரை,

பொதுச் செயலாளர், தி. மு. க. தலைமை நிலையம்

2/45 முத்துமாரிச் செட்டித் தெரு,

மண்ணடி :: சென்னை-1.

மலேயாவின் புது மசோதாவுக்கு பலத்த எதிர்ப்பு

இந்தியர் சீனர் வர்த்தகம் பாதிக்கப்படுமாம்

குலாலம்பூர், ஏப். 5—

எல்லா கணக்குகளையும் வர்த்தகர்கள் ஆங்கிலம் அல்லது மலேயா பாஷையில்தான் வைத்துக்கொள்ள வேண்டும் [...]

இதை எதிர்த்து செலாங்கூர் வர்த்தக சபை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது.

இம்மசோதாவை இருசபையின் மெம்பர்களும் தீவிரமாக எதிர்க்கவேண்டும் என்றும் இச்சபை கேட்டுக் கொண்டிருக்கிறது.

இச்சபை இந்திய வர்த்தக சபையை தன்னுடன் ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொண்டிருக்கிறது இப்புது ஏற்பாட்டினால் இந்தியர் சீனர் வர்த்தகம் பெரிதும் பாதிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

அலவன்ஸை ஏற்க 7000 சர்க்கார் சிப்பந்திகள் மறுப்பு

கோரிக்கைகள்மீது முடிவு செய்ய தாமதமாயிற்றாம்

சிம்லா, ஏப். 2—

நஷ்டஈடு அலவன்ஸ் அளிப்பது பற்றி தாங்கள் செய்த கோரிக்கை மீது இந்திய சர்க்கார் முடிவு செய்வதில், மன்னிக்க முடியாத அளவுக்கு தாமதம் ஏற்பட்ட காரணத்தால், பஞ்சாப் அகௌண்டென்ட் ஜெனரல் ஆபீஸ் சிப்பந்திகள் 700 பேர், தேற்று தங்களுக்கு அளிக்கப்பட்ட நஷ்டஈடு அலவன்ஸை பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். 19 மாதங்களுக்கு முன்னர் இவர்கள் கோரிக்கை சர்க்காருக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சுதந்திரமறியாத "சூரப்புலிகள்"!

—————(0)—————

வித்தைக்கும் புத்திக்கும் ஒற்றுமை வேண்டும்!

—————(0)—————

துறையூரில் சி. பி. சிற்றரசு

26—3—50ல் துறையூரில் நடந்த தி. மு. க. பொதுக் கூட்டத்தில் பேசிய தோழர் சி. பி. சிற்றரசு, 'குடியரசு' 'சுதந்திரம்' என்பவைகளுக்கு தந்த விளக்கமாவது:—

"இன்று நாம் குடியரசுக் கோட்டையில் சுதந்திர நிழலில் இருக்கின்றோம் என்று கூறுகிறார்கள். சுதந்திரம், குடியரசு என்ற வார்த்தைகள் எங்கு பார்த்தாலும் முழங்கப்படுகின்றன. சுதந்திரம் என்றால் உண்மையான பொருள் என்ன? எட்டமுடியாத மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒன்றை எட்டும்படி செய்வதும், சிந்திக்க, சொல்ல, எழுத, செய்ய உரிமையளிப்பதும், எளியோரை வலியோர் வாட்டாதிருக்க ஏற்படுகிற ஒரு சக்தியை, தனி மனிதன் அடையமுடியாத வசதியைப் பலர் பொருளைக்கொண்டு வசதியைச் செய்துகொடுப்பதும் ஆன சாதனங்களையே நாம் பொதுவாகச் சுதந்திரம் என்கிறோம். மேலும் அது பிறரால் பறிக்கமுடியாத, பிறருக்குக்கொடுக்க முடியாத மனித எண்ணத்தின் அடிவாரத்திலே இருந்து எழும்பும் ஓர் எண்ணத்திலேதே சுதந்திரம் [illegible]

[illegible] அடிப்படை, சுதந்திர எண்ணந்தான். நியாயமான சுதந்திரத்தை இடம், நிறம், இனம் என்ற பேதங்களற்று, எல்லார்க்கும் வழங்கும் நாடு ஒன்றுதான் உண்மையான சுதந்திர நாடு. அதை அனுசரிக்காத நாடு ஓர் எரிமலைக்கு ஒப்பாகும். அந்த நாட்டை ஆளுகின்ற சர்க்கார் அந்த எரிமலை மேலிருக்கும் ஒரு கந்தக் கிடங்காகும்.

நம் நாட்டில் சுதந்திரம் சரியாக பரிபாலிக்கப்படாததற்குக் காரணமென்ன? வெவ்வேறு மொழி. கலை, பண்பு, நாகரிகம், உணவு, உடைகளாகியவைகள் வேறுபட்ட 30 கோடி மக்களை ஒரே அரசியலில் கொண்டுவந்து நிறுத்தியதின் விளைவுதான் இது. மேலும் ஆளும் வர்க்கத்தார்க்கே இன்னும் சுதந்திரம் என்றால் என்ன என்று புலப்படவில்லையே!

சுதந்திரக்குழந்தையை நாங்கள்தான் ஈன்றோம். ஆகையால் அதைப்பற்றி மற்றவர் கவலைகொள்ளத் தேவையில்லை என்கின்றனர். இருக்கலாம் ஆனால் குழந்தையைப் பெறும் அதிகாரமும், வசதியும் உங்களுக்குண்டே தவிர, அதைக்கொல்லும் உரிமை பெற்றதாய்க்கு இல்லையென்பதும், தவறிதான் ஈன்ற குழந்தையைத் தாயே கொல்ல எத்தனித்தாலும், தாய் தண்டிக்க வேண்டியவள் என்று சாதாரண அறிவுடையவனும் சொல்லிவிடுவான். ஆகையால் குழந்தையை ஈன்ற உங்களுக்கு அதைக்காப்பாற்ற இயற்கைப் பாலும், செயற்கைப்பாலும் இல்லாவிட்டால், அந்த வசதிகள் உள்ள திறமையுள்ளவரிடம், அதைக் கண்ணியமாக ஒப்படைத்து விடுங்கள்.

அடுத்தது எங்கள் மேல் சுமத்தப்படுகின்ற குற்றம், "நாங்கள் கடவுளின் விரோதிகள்" என்பது. இதுஎவ்வளவு மோசமான குற்றச்சாட்டு என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். ஏனெனில், கடவுளை இன்னும் நாங்கள் பார்க்கவே இல்லை. பார்க்காத ஒன்றினிடம் பகை கொள்வது எப்படிப் பொருத்தமாகும்?

அடுத்தது நாங்கள்புராணங்களை எதிர்க்கின்றோம் என்பது, இதற்காக நாங்கள் வருந்தவில்லை. மாறாக சந்தோஷப்படுகின்றோம். ஏனெனில், புத்திக்கும் வித்தைக்கும் தொடர்பு ஏற்படுத்தி பல விஞ்ஞானப் பொருள்களைக் கண்டுபிடித்திருக்கும் மேல் நாட்டார், அல்லது வருங்கால அறிவு உலகம் நம்மைப் பார்த்து என்ன சொல்லும்? ஆன்மீகவாதிகள், அடியார்கள் அண்டத்தில் ஓர் உலகங் கண்டதாகச் சொன்னவர்கள், ஆண்டவனிடம் அன்றாடம் பேசியதாகச் சொன்னவர்கள், அற்புதங்கள், பல அவதாரங்கள் [illegible]சச் சொல்லிய புரா[illegible]

[illegible]ஒல ஒரு அரிக்கன் [illegible] கண்டுபிடிக்க [illegible]யவில்லை என்று எதிர்த்துக்கேட்க ஒரு அறிவாளியும் அங்கே தோன்றவில்லையா, என்று அயல்நாட்டார் நமக்கு அவமானத்தை மறைமுகமாக அறிமுகப்படுத்தும் கொடுமையிலே இருந்து நாங்கள் விடுபட்டிருக்கின்றோம் என்ற ஒரே மகிழ்ச்சியால், வருங்கால வரலாற்றில் இந்தியாவில். அதுவும் தென்னாட்டில் சிந்தனையாளர்கள், சீர்திருத்தவாதிகள் இருந்தார்கள். பழமையைச் சாய்த்தார்கள் புதுமையைப் பூதலத்திற்களித்தார்கள் என்று கூறுமல்லவா! அந்த ஒரு ஆறுதலே எங்களுக்குப் போதும், அந்த நிலையடைய அண்டுகள் பலவாகட்டும் 99-வது வயதில் மாங்கன்றை நடும் கிழவன் அதன் பலனையடைய போவதில்லை. அவன் முன்னோர் அவனுக்குச்செய்ததைப்போலவே அவனும் அவனது பின்சந்ததிகளுக்குச் செய்கிறான். அதுபோலவேநாமும் அந்தப்பயனை நேரடியாக நமது வாழ்நாளில் அனுபவிக்க முடியாவிட்டாலும், நம் பின் சந்ததிகள் அந்தப் பயனைப்பெற்று நல் வாழ்வு வாழட்டும்.

சிமிட்டி மூட்டைகள் கையாடியதாக

திருச்சி, ஏப். 2—

50 சிமிட்டி மூட்டைகளைக் கையாடிய குற்றத்திற்காக, வீ ராமனாதன் என்னும் ரயில்வே பாதை இன்ஸ்பெக்டர்மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

திருச்சி உதவி முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் தோழர் எ. ரகுநாதராவ் இவர் செஷன்ஸ் கோர்ட்டில் விசாரிக்கப்பட வேண்டுமென்று தீர்ப்பளித்தார்.

காட்டு வழி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றிக்கொள்ளவேண்டும். அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்க்கக்கூடாதுஎன்றால், அது எப்படி நீதியின்பாற்பட்ட செயலாகும்.

கிராமங்களின் வளத்தை அரசாங்கமும். நகரங்களும் பெரும்பகுதி பிடுங்கிக்கொண்டான பிறகு, தங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ள ஏது அவற்றிடம் வளம்? உணவுப் பொருள் வசதி, குடி நீர் வசதி, இருக்கை வசதி, கல்வி வசதி, வைத்தியவசதி, போக்குவரத்து வசதி, நல்ல பாதை வசதி பல வசதிகளைப் போதுமான அளவுக்குப் பெறுமலே எத்தனையோ கிராமங்கள் தவிக்கின்றனவே— அவைகள் தங்கள் தேவைகளைத் தாங்களே எப்படிச் சீர் செய்துகொள்ள முடியும்? கைப்பொருளை அரசாங்கத்திடம் கொடுத்துவிட்டு வாழும் கிராமம், தனக்குத் தேவையான வசதிகளைச் செய்துகொள்ள அரசாங்கத்தை எதிர்பார்க்காமல் வேறுயாரை எதிர்பார்க்க முடியும்? ஒரு கிராமத்திற்கு வேண்டிய இன்றியமையா வசதிகளையெல்லாம் செய்து கொடுத்துவிட்டு, அவற்றைக் கொண்டுதான் கிராமங்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமேயல்லாது, அரசாங்கத்திடம் அதிகப்படியாக எதிர்பார்க்கக் கூடாது என்று மந்திரியார் கூறுவாரேயானால் அதில் ஓரளவுக்குப் பொ[illegible] இருக்க[illegible]

[illegible] கிராமம் எதிர்பார்க்கக்கூடாது தன்னைத்தானே பார்த்துக் கொள்ள வேண்டுமென்றால், பின்பு நாடாளும் அரசாங்கம் ஏன், அதற்கு மந்திரிமார்கள் ஏன், அவர்களுக்கு எடுபிடி அதிகாரங்கள் ஏன்? உதவியைப்பெற்றுக்கொண்டு தேவையான உதவியைத் திருப்பிச் செய்ய மனமில்லாத அரசாங்கம் இருப்பதைவிட, இல்லாமலிருப்பது மேலல்லவா யிற்றே. மன அமைதியாவது ஏற்படுமே!

காந்திய வழியில் வாழ்வு நடத்த, அரசாங்கம் வசதிகளை எல்லாம் செய்து தந்திருப்பதாக மந்திரியார் கூறுகிறார் என்ன வசதி—எங்கு—எப்படிச் செய்துகொடுத்திருக்கிறாராம் மந்திரியார்? காந்திய வாழ்வு முறை எல்லோராலும் எப்பொழுதும், எங்கும் கடைப்பிடிக்க முடியாத தொன்றாகும் என்பதுதான், அவர் உயிரோடு வாழ்ந்த காலத்திலேயே தெளிவாகி விட்டதே! அவர் இறந்த பிறகுமா அதற்கு மதிப்பு இருக்கப்போகிறது! உள்ளத்தைக் கொண்டு திருப்தி அடை—போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து என்ற முறைகள் உபதேசித்துவிட்டு, அரசாங்கம் எந்தா வசதிகள் செய்து கொடுத்திருப்பதாகவும், அவற்றைக் கொண்டு இனிய வாழ்வு நடத்தலாம் என்று கூறுவதற்கு ஊதியம் பெறும் ஒரு மந்திரியர் தேவையில்லையே, ஊர் சுற்றித்திரியும் பரதேசியே போதுமே!

கிராமங்களை அபிவிருத்தி செய்வதாகப் பறைசாற்றிக் கொண்டு அங்குமிங்குமாக குறிப்பிட்ட சில்கிராமங்களில் இந்த அரசியலார் செய்து காட்டும் திட்டம் எதுவும் இதுவரையில் வெற்றிபடைந்ததாகத் தெரியவில்லை. பணப் பாழானதுதான் மிச்சம். காங்கிரஸ் ஆட்சியாளர் கவைக்குதவாத் திட்டங்களைப்போட்டு [illegible]ண்டு காசைக் கரியாக்கி [illegible]வதைத் தவிர, வேறு [illegible]யான பலனைக் கண்டதாகத் தேடிக்கூட பார்க்க முடியவில்லை. ஆனால் உபதேசம் செய்வதில மட்டும் குறைவுஏற்படவில்லை. செய்உபதேசம் எதைபாவது மக்கள் கடைப்பிடித்தார்களா—மக்களால் கடைப்பிடிக்கத்தான் முடிந்ததா என்றால், அதுவும் இல்லை!

கிராமங்களைச்சிறுநகரங்கள் போல் எண்ணி, நகரத்திற்குரிய வசதிகளைக் கிராமங்களிலும் செய்து தர அரசாங்கந்தான் முன் வர வேண்டும். அப்பொழுதுதான் கிராமம் அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்க்காமல் தன்னைத் தானே சரிப்படுத்திக்கொள்ள முடியும். கிராமங்களின் இன்றியமையாத்தேவைகளை நிறைவேற்றிவிட்டு, உபதேசம் புரிய தோழர் சந்திரமௌலி ஊரூராகப் புறப்பட்டிருப்பாரேயானால், அது அவருக்குப் பொழுது போக்காய் இருக்கும், கேட்பவர்களுக்கு தாக்காலட்சேபமாக இருக்கும்! கிராமங்களைக் காட்டுப்பாதைக்குஅழைத்துச்செல்லாமல், நகரப்பாதைக்கு அழைத்து வர இனியேனும் மந்திரிமார்கள் முயலுவார்களா!

————

டர்பன். ஏப். 5—

டர்பனிலுள்ள இந்தியர்களுக்கு முதல் தரமான ஆஸ்பத்திரி ஒன்று சீக்கிரமே ஏற்படவிருக்கிறது. இது அவர்களின் சொந்த முயற்சியினால்தான் சாத்யமாகவிருக்கிறது.

இரண்டு வருஷங்களுக்குமுன் இந்திய மெடிகல் சர்வீஸஸ் டிரஸ்ட் ரூ. 780,000ஐ எழுப்ப முயற்சிசெய்யப்பட்டது. பின்னர் இந்தியர்களிடம் பணஉதவி கோரப்பட்டதில் நன்கொடைகள் தாராளமாக கிடைத்தன.

அறிக்கை

—————(0)—————

இந்து சட்டத் திருத்த மசோதா பற்றி பொது மக்களின் கருத்தை அறிய, ஏப்ரல் 14-ம் நாளன்று டில்லியில் மாநாடு ஒன்று கூட்டப் போவதாகத் தோழர் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் அறிவிப்புச் செய்துள்ளதால், அதற்குள் அவர் கைக்கு போய்ச் சேருமாறு. திராவிட முன்னேற்றக் கிளைக் கழகங்கள் கீழ்கண்டபடி தந்தி—தபால் மூலம் செய்தியை அனுப்பி வைக்கக் கோருகிறேன்.

அனுப்பிவைக்கவேண்டிய செய்தி:—

Dravida Progressive Federation of............offers its wholehearted Support to the Hindu Code Bill. This Federation considers the Bill as the minimum effort at reorganisation of Hindu Society on Rational principles, and urges the government in general and Dr. Ambedkar in particular to legislate without delay or hesitation or modification the Hindu Code Bill and without paying any heed to the cooked up opposition of the orthodox elements and the reactionary groups.

செயலாளர்,
பிரசாரக் குழு-தி. மு. க.
தலைமை நிலையம் 5-4-50.

மணம் வேண்டாம் மரணமே போதும்!

கிழவனை மணக்க மறுத்து உயிர் துறந்த வீராங்கனை

ஆரணி, ஏப். 5—

60 வயது கிழவனை மணந்துகொள்ளும்படி வற்புறுத்தப்பட்ட 15 வயதுள்ள ஒரு அனாதைப்பெண், அச்செய்கைக்கு இணங்காமல் தன்மீது மண்ணெண்ணையை ஊற்றிக் கொளுத்திக்கொண்டாள்.

இத்தச் சிறுமி ஆரணியிலுள்ள ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டு, ஏப்ரல் 1ந்தேதி அங்கேயேஇறந்துவிட்டாள்.

கிழவனை மணந்துகொள்ளும்படி அப்பெண் மிகவும் வற்புறுத்தப்பட்டாளாம். திருமணம அடுத்தவாரம் நடக்க இருந்தது.

அவள் ஒரு அனாதை-பெற்றோர் இலலை உற்றார், இல்லை. பெற்றோர் உற்றோர் இருந்து ஆதரிக்க ஆயிரமவர் பெற்ற ஆரணங்குகளே கிழவர்களை மணக்கவேண்டிய நிலை நம நாட்டில் உள்ளது. அப்படியிருக்க அவள் ஒரு அனாதை மறுத்தாவிடுவாள், என்று நினைத்திருப்பான் கிழவன். அவன் காலாகாலத்தில்கலியாணம் செய்துகொண்டிருந்தால் அவன் மணக்க நினைத்த பெண்ணுக்குப் பல ஆண்டுகள் மூததாக உள்ள பேத்தியைப பெற்றிருப்பான!

பொன்னுடலும் இன்னுயிரும் அவளுககுச் சொந்த. அவைகளை வயிற்றின் கொடுமைக்காக அந்த அனாதைப் பெண் 60 வயது கிழவனுக்கு அடகு வைக்கவில்லை. "கூலிக்காரனாக இருந்தால்கூட, ஒரு வாலிபனாக இருந்தால போதும், கூழைக் குடித்தாவது ஒரு காளையுடன் குலாவி வந்தால போதும்." என்று அவள் எண்ணியிருப்பாள்.

ஆனால் மணந்துகொள்ளும்படி வற்புறுத்தப் பட்டிருப்பாள், அதன விளைவுதான் தற கொலையாக இருக்கலாம். இது போன்றவற்றைத் தகுந்தவிசாரணை நடத்தித்தக்க முடிவுக்கு வரவேண்டியது அரசியலார் பொறுப்பாகும். அவ்வாறு செய்தால்தான், பல சிறுமிகளா மரணத்தை மணக்கவேண்டிய நிலைமாறும்.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

7 - 4 - 50

சன்னாசி நல்லூர்:—சி. பி. சிற்றரசு, ஏ. பி. தர்மலிங்கம்.
திருச்செங்கோடு:—என். வி. நடராசன்.
கோவை:—ஈ. வி. கே. சம்பத், பி. பழனிசாமி.

8 - 4 - 50

செந்துறை:—சி. பி. சிற்றரசு, அ. பெ. தர்மலிங்கம், எம். எஸ். மணி.
ஆரணி:—என். வி. நடராசன், புலவர் கோவிந்தன், சி. வி. குட்புசாமி, மா. இளஞ்செழியன்.

9 - 4 - 50

கோவை:—ஏ. சித்தையியன், கிருட்டினசாமி.
திருவாதவூர்:—ஏ. வேலுச்சாமி, எஸ். முத்து, எம். அய்யாச்சாமி, எம். எஸ். சிவசாமி, இரா. சு. தங்கப்பழம்.
அரியலூர்:—டி. கே சீனிவாசன், ஏ. பி, தர்மலிங்கம்.
சித்தாளந்தூர்:—என். கே பி. வேல், என். பி சதாசிவம், டி. ஜி கணபதி

நேரு-லியாகத் பேச்சு

லண்டன் இந்திய வட்டாரத்தில் மௌனம்

லண்டன், ஏப். 5—

புதுடில்லியில் இந்திய பிரதம மந்திரி நேருவுக்கும் பாகிஸ்தான் பிரதம மந்திரி லியாகத் அலிக்குமிடையே நடைபெறும் பேச்சு வார்த்தைகள் குறித்து இங்குள்ள வட்டாரங்களில் வெற்றியில் முடியும் என்ற நம்பிக்கையே இருந்து வந்தாலும் பத்திரிகைகள் தங்கள் போக்குப்படி அபிப்பிராயம் தெரிவிக்காமல் ஜாக்கிரதையாகவே நிலைமையைக் கவனித்து வருகின்றன.

சர்க்கார் வட்டாரத்திலும் இப்பேச்சின் முடிவு என்னவாகிறது என்பதை அறிய ஆவல் காணப்படுகிறது.

இதற்குள்ளாக பூரண வெற்றி ஏற்பட்டுவிடும் என்று சொல்லிவிட இங்குள்ள இந்திய வட்டாரங்கள் தயாராக இல்லை. அவர்களும் ஆவலுடன் நிலைமையைக் கவனித்து வந்தபோதிலும் இவ்விஷயமாக எவ்வித கருத்தையும் அவர்கள் வெளியிடாமலேயே இருக்கின்றனர்.

பூகோளம் தெரியாத சட்டசபை அங்கத்தினர்!

புதுடில்லி, ஏப். 5—

தோழர் மஹாவீர் தியாகி சட்டசபை அங்கத்தினராகிய நீங்கள் மதத்துக்கு வக்காலத்து வாங்கிப் பேசுகிறீரே தவிர இந்தியாவில் எது இருக்கிறது எது இல்லை என்பது கூட அவருக்குத் தெரியவில்லை.

"இலங்கையில் உள்ள காடுகள் ஏன் சரியாகப் பயன்படுத்திச் செய்யப்படவில்லை" யென்று அவர் பாராளுமன்றத்தில் கேள்வி கேட்கிறுரென்றுர் அவருக்கு இ[illegible] இலங்கை பூகோளம் தெ[illegible]மென்று கூறமுடியுமா?

"இலங்கை இந்தியாவில் இ[illegible]லையே எப்படி அங்குள்ள காடுகளைப் பயன்படுத்துவது?" என்று மந்திரிகார் கேட்டபிறகுதான் அந்தமானை நினைத்துக்கொண்டு இலங்கையைப் பற்றிக் கேட்டேன் என்று மஹாவீர் தியாகி கூறினர்.

காலிபோனியா அருகில் ரஷ்ய சப்மரீன்கள்?

யு. எஸ். கடற்படை சந்தேகம்

நியூயார்க், ஏப். 5—

காலிபோர்னியாவுக்கருகில் நான்கு மர்ம சப்மரீன்கள் காணப்பட்டது ரஷ்ய சப்மரீன்களாகவே இருக்கவேண்டும் என்று யுனைடெட் ஸ்டேட்ஸ் கடற்படை கருதுகிறது.

கொலகான் என்ற நாசகாரியின் கேப்டன் ஹோல் புருக்தான் சப்மரீனுடன் ராடார் சாதனம் மூலம் தொடர்பு ஏற்படுத்த முயன்றதாகவும் அவை தப்பி ஓடிவிட்டன வென்றும் இதிலிருந்து மிகவும் நவீன சாதனங்களைக் கொண்டதாகவே அவை இருக்கவேண்டும் என்றும் கூறுகிறார். —ருனோப்

ஷாங்கேயில் ரஷ்யர் கூட்டம் அதிகரிக்கிறது

ஹாங்காங், ஏப். 5—

ஷாங்கேயில் ரஷ்ய டெக்னிஷியர்கள், ஆலோசகர்கள், நிர்வாகஸ்தர்கள் ராணுவத்தினர்கள் கூட்டம் அதிகரித்து வருகிறதென்று அங்கிருந்து இங்கு வந்து சேர்ந்துள்ள சீன வியாபாரிகள் கூறுகின்றனர்.

சென்ற மூன்று வாரங்களில் மட்டும் 5000 ரஷ்யர்களுக்கு மேல் ஷாங்கேயில் குவிந்திருக்கின்றனராம் ரஷ்யர் பிரதேசத்தில் சீனர்கள் போக்கூடாது என்ற கெடுபிடி உத்திரவும் பிறப்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

மதுராந்தகத்துக்கருகில் இரும்புக்கால சிற்றூர்

தோண்டி யெடுக்கப்பட்டது

மதுராந்தகம், ஏப். 2—

வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட நாகரிகமுள்ள சின்னங்கள், மதுராந்தகத்துக்கு 6 மைல் தொலைவிலுள்ள பொட்டங்காடு என்னும் கிராமத்துக்கருகில் புதைபொருள் ஆராய்ச்சிக் கழகத்தாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

கடந்த ஒரு மாதமாக இந்த ஆராய்ச்சி நடந்து வருகிறது.

தென் இந்தியாவின் இரும்புக் காலத்து நாகரிகப் பொருள்கள் கிடைக்கப்பட்டவை கருதப்படுகின்றன.

இரும்பு வாள்களும், அம்பு முனைகளும்; ஈட்டிகளும் தோண்டியெடுக்கப்பட்ட நிலம் சுடுகாட்டில் ஒரு பகுதியாக இருக்குமென்று கருதப்படுகிறது. எலும்புக்கூடுகளுடன் பல புத்தக் கருவிகளும் கிடைத்துள்ளன.

மதுராந்தகம் தாலுகாவில் இது போன்ற பல இடங்கள் புதைபட்டுக் கிடைப்பதாகக் கூறப்படுகிறது.

மனிதன் தோன்றிய வரலாறு

'யூனெஸ்கோ' பிரசுரிக்கும்

பாக்தாத், ஏப். 5—

ஐ. நா. கல்வி கலாசார ஸ்தாபனம் (யூனெஸ்கோ) மனித வர்க்க சரித்திரத்தை புத்தகமாக வெளியிடமுயற்சி செய்துவருகிறது.

இதற்கு ஒரு கட்டுரை எழுதும்படி இராக் சர்க்கார் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறதாம். மேனாட்டு சங்கீதத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதோ, அவ்வளவு முக்கியத்துவம் கீழ் நாட்டு சங்கீதத்திற்கும் கொடுக்கப்பட வேண்டும் என்று இராக்லளித கலைக் கழகம் வற்புறுத்தியிருக்கிறது.

மதுரையில் அழகிரி நினைவு நாள்

2—4—50 மாலை 7 மணிக்கு மதுரை தமுக்க மைதானத்தில் (Peoples Park) தோழர் [illegible]சது அவர்கள் தலைமையின் கீழ் திராவிட மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பாக அழகிரி நினைவுநாள் விழா கொண்டாடப்பட்டது. ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் ஆர்வத்தின் உருவங்களாக குழுமியிருந்தனர். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மதுரை [illegible] அதரவு இருக் [illegible] அ[illegible]மான வெற்றியளித்தது. மைதானம் கொள்ளாத அளவுக்கு வெள்ளம்போல் கூடியிருந்த அத்தனை மக்களும் உணர்ச்சிப் பெருக்கோடு கூட்டத்தை கவனித்தனர். அதேநாளில் மதுரையில் வேறு கட்சிக் கூட்டங்கள் நன்கு நடந்தும் முன்னேற்றத்துக்கு எமது ஆதரவைப் பாரீர்!! என்று முழங்குவதைப்போல மதுரை மக்கள் மகிழ்ச்சிக்களை ததும்ப வீற்றிருந்தனர். கணக்கிடமுடியாத அளவுக்கு சாரை சாரையாக வந்து குழுமிய வண்ணமிருந்தனர்.

தோழர் அழகரடி முத்து, தோழர் அய்யாசாமி ஆகியோர் அழகர்சாமி அவர்களின் தொண்டு குறித்துப் பேசினார்கள்.

பின்பு தோழர் மு. கருணாநிதி அவர்கள் பேச ஆரம்பித்தார் ஒரு தோழரால் அன்னாருக்கு அளிக்கப்பட்ட 101 கலனு கொண்ட பணமுடிப்பை மதுரை மறுமலர்ச்சி மன்றத்துக்கே நன்கொடையாக அளித்துவிட்டார்.

அழகர்சாமியின் பணிகளைப் பற்றியும் அவர்விட்டுப்போன வேலைகளை நாம் தொடர்ந்து செய்ய வேண்டியவைகளைப் பற்றியும் விரிவாக 1½ மணி நேரம் சொற்பொழிவாற்றினார். இரவு 10-மணிக்கு மக்கள் கடலின் வாழ்த்தொலி வானைப் பிளக்க அந்த மாபெரும் கூட்டம் இனிது முடிந்தது.

இந்து சட்டத் திருத்த மசோதா ஆதரிப்புப் பெண்கள் மாநாடு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில்

இந்துச் சட்டத் திருத்த மசோதா ஆதரிப்புப் பெண்கள் மாநாடு ஒன்று சென்னையில் நடைபெற, ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. இடம், காலம், நிகழ்ச்சி முதலிய விவரம் விரைவில் அறிவிக்கப்படும்.

பொறுப்பாளர்,
தலைமை நிலையம்—தி. மு. க.

இனி நடப்பவை

சென்னை புதுப்பேட்டை:—இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம் 7—4—50 வெள்ளியன்று கழகக்கட்டிடத்தில் நடைபெறும். செயற்குழுவினர்கள் தவறாது வர கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

* * *

புதுச்சேரி:—இவ்வூர் தி. மு. க. செயற்குழுக்கூட்டம் 9—4—50 ஞாயிறன்று காலை 10 மணிக்கு பெருமாள்கோவில்தெரு, எண் 105 இல்லத்தில் நடைபெறும். அதுபோது மிக முக்கிய செய்திகளைப் பற்றிய முடிவுகள் காணவேண்டியிருப்பதால், குழு உறுப்பினர்கள் தவறாமல் வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

* * *

திருச்சி:—7—4—50 வெள்ளி காலை 10-30 மணிக்கு இவ்வூர் திராவிட மாணவர் முன்னேற்றக் கழக செயற்குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அதுபோது இவ்வாண்டு வரவு செலவு கணக்கு சரிபார்க்கப்படும். இன்னும் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்படவேண்டியிருப்பதால், செயற்குழு [illegible]

* * *

கோவை:—இர்கூர் 9-வது வட்ட திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா, 9-4-50 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-மணிக்கு, லைட் ஹவுஸ் தியேட்டருக்குப் பின்புறமுள்ள திடலில் நடைபெறும். விழாவிற்குப் புலவர் கிருட்டினசாமி அவர்கள் தலைமை தாங்குவார். சேலம் தோழர் ஏ. சித்தையன் அவர்கள் கழகத்தைத் துவக்கி வைப்பார். மற்றும் பலர் பேசுவர்.

* * *

திருவாதவூர்:—இவ்வூர் திரௌபதையம்மன் கோவில் முன்பு, 9—4—50 ஞாயிறு மாலை 6 30 மணிக்கு, தி. மு. க. பொதுக் கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர்கள்: ஏ. வேலுச்சாமி, எஸ். முத்து, எம். அய்யாச்சாமி, எம். எஸ். சிவசாமி, இரா. சு. தங்கப்பழம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

கடையநல்லூர்:— 7—4—50 வெள்ளி மாலை 6 மணிக்கு இவ்வூர் தி. மு. க. கிளையின் ஆதரவில் இவ்வூர் மார்க்கட்டிற்கமுன்ள "மறுமலர்ச்சி" மைதானத்தில் தோழர் துரைசாமி அவர்கள் தலைமையில் 'அழகிரி நினைவு நாள்' நடைபெறும். மதுரைத் தோழர் எம். அய்யாசாமி அவர்களும், தோழர் ஆ. திராவிடமணியவர்களும் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். கூட்டத்தில் அறந்தாங்கோட்டை தோழர் எம். எஸ். இராமசாமி அவர்களும் கலந்துகொள்வார்.

* * *

மதுரை:—இவ்வூர் மத்திய வட்டார தி. மு. கழகத்தின் கிளைக் கழகத் துவக்க விழாப் பொதுக் கூட்டம் 9—4—50 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு 'அண்ணா பூங்காவனத்தில்' நடைபெறும். தோழர் சமூகதாசன் பேசுவார்.

* * *

சென்னை சேப்பாக்கம்:—இவ்வூர் தி. மு. கழகத்தின் செயற்குழுக்கூட்டம் 9-4-50 ஞாயிறு பகல் 2-மணிக்கு அருணாசல ஆச்சாரி தெரு, 13 எண் மாடியில் நடைபெறும். அழகிரியின் நினைவு நாளைக் கொண்டாடவும், மற்றும் கழக வளர்ச்சியின்பால பிரச்னைகளைப் பற்றியும் முடிவு செய்யப்படும். தோழர் கா. அப்பாதுரை எம். ஏ. எல். டி. அவர்கள் தலைமைவகிப்பார்.

* * *

ஆரணி:—இவ்வூர் பகுத்தறிவு இலவசப் படிப்பகச் சார்பில், 8—4—50 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு, கொசங்காலையம் தர்மராசா கோயில் மைதானத்தில், தோழர் சி. வி. குப்புசாமி தலைமையில் "அழகிரி நினைவு நாள்" பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர்கள் மா. இளஞ்செழியன், என். வி. நடராசன், புலவர் கோவிந்தன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள். ஒலிபெருக்கி உண்டு.

* * *

செந்துறை:—8—4—50 சனிக்கிழமை மாலை 5-மணிக்கு இவ்வூர் தி. மு. கழகத் துவக்க விழா ராவி கம்பெனி சிமெண்டுகள மைதானத்தில், அழகிரி நாள் பொதுக் கூட்டமாக நடைபெறும். தோழர் ராஜமாணிக்கம் செட்டியார் அவர்கள [illegible] பே[illegible]

* * *

சித்தாளந்தூர்:-இவ்வூர் தி.மு.க. துவக்கவிழாப் பொதுக்கூட்டம் 9—4—50 அன்று மாலை நடைபெறும். அதுபோது தோழர்கள் என். கே. பி. வேல், என். பி. சதாசிவம், டி. ஜி. கணபதி ஆகியோர் பேசுவார்கள்.

* * *

சைதாப்பேட்டை:— இவ்வூர் மறுமலர்ச்சி மன்றத்தின் சொற்பயிற்சிக் கூட்டம் 7-4-50 வெள்ளிக்கிழமையன்று மாலை 6-மணிக்கு சடையப்ப முதலித் தெருவிலுள்ள 2-வது எண்ணுள் இல்லத்தின் மேல் மாடியில் தோழர் கா. அப்பாதுரை அவர்கள் தலைமையில் நடைபெறும்.

* * *

மாலவரம்:—9—4—50 ஞாயிறு மாலை 6 மணிக்கு இவ்வூர் தி. மு. க. கட்டிடத்தில் தோழர் ஆர். பழனிச்சாமி அவர்கள் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் 'அழகிரி நினைவு நாள்' விழாக் கொண்டாடுவதும், பல முக்கிய பிரச்னைகளைப் பற்றியும் ஆலோசிக்க வேண்டியிருப்பதால் உறுப்பினர் யாவரும் தவறாது வரக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கள் விற்கிறார்கள்!

பிட்டபோல், ஏப். 3—

வெல்லம் செய்யக் கொடுத்த லைசென்சுகளை வைத்துக்கொண்டு, சில மரமேறும் தொழிலாளிகள் கள்ளை கோட்டு விற்பனை செய்கிறார்களென்றும் இது உடனே தடுக்கப்படவேண்டுமென்றும் தோழர் சலாம் சாஹிப் தலைமையில் நடந்த பிர்க்கா காங்கிரஸ் கூட்டத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1